விலை: ரூபா. 2/-
(நன்கொடை

# இந்து கலா சாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர்: திரு ஆர். வைத்திமாநிதி

மலர்: 1 ★ திருவள்ளுவர் ஆண்டு 2919 தைத் திங்கள் 15 ஆம் நாள் (1.2.1989) ★ இதழ்: 6

# தமிழ் கலாசாரத்திற்கு ஏன் இந்த பாரபட்சம் ?

**யுனெஸ்கோ நிறுவனத்தின் உலக கலாசாரம் தொடர்பான வெளியீட்டில் பாரம்பரிய தமிழ் கலாசாரம், மற்றும் அழியாச் சின்னங்கள் போன்ற பல அரிய கலைப்பொக்கிஷங்கள் இடம் பெருததன் காரணத்தால் தமிழ் சமுதாயம் வருந்துகிறது.**

**இந்நிலை இனிவரும் காலங்களிலும் தொடராதிருக்க தகுதிவாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா ?**

இலங்கை பல்லின பல மதங்களைக் கொண்ட ஒரு நாடு. தனித்துவமான பல்வேறு கலை, கலாசார, வரலாற்றுப் பாரம் பரியங்களையும் நாம் இங்கு காணலாம். இவற்றைப் பேணிக் காப்பதிலும், புதைந்து கிடக்கின்ற வரலாற்றை மீளக் கட்டி எழுப்புவதிலும் அந்தந்த இனத்தை, மதத்தைச் சார்ந்தவர்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டுவது இயல்பே.

### தேசிய சொத்து

அதே வேளையில் எமது மூதாதையர் விட்டுச் சென்ற வரலாற்றுப் பாரம் பரியங்கள், கலைப் பொக்கிஷங்கள் அனைத்தும் நாட்டின் தேசிய சொத்தாகும். இதனைப் பேணிப் பாதுகாப்பதில் அரசுக்குப் பெரும் பங்குண்டு. அவ்வகையிலேயே நாட்டின் பல்வேறு பாகங்களிலும் வரலாற்றாய்வுகளும் தொல்பொருள் அகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சலாநிதி ஜேம்ஸ் இரத்தினம் குற்றச்சாட்டு

இலங்கையைப் பொறுத்து வரலாற்றுத் தேடல் சரியான முறையில் இடம் பெறவில்லை என்ற குற்றச் சாட்டு பரவலாக முன் வைக்கப்பட்டு வந்துள்ளது. மறைந்த கலாநிதி ஜேம்ஸ் ரட்னம் போன்ற ஆய்வாளர்கள் இதனைப் பல முறை தகுந்த ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டியும் உள்ளனர். குறிப்பாகத் தமிழர் சம்பந்தமான வரலாற்றுத் தேடலே புறக்கணிக்கப்பட்டு வருவதாகப் பலமான குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன.

### திசைதிருப்பப்படவில்லை

ஆரிய மயம், சிங்கள மயம், பௌத்த மயம் போன்ற வரலாற்றுத் தேடல்கள் முக்கியத்துவம் பெற்று நடைபெற்றுக் கொண்டு இருந்தவேளையில் தான் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கா. இந்திரபாலா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியானதுஇலங்கையின் வரலாற்றுத் தேடலில் புதிய பரிதாபத்திற்கு வித்திட்டது. ஆனல் இவை போன்றவைகளை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வகையில் தேசிய ரீதியிலான வரலாற்றுத் தேடல்கள் திசை திருப்பப் படவில்லை. எனவேதான் தமிழர் சம்பந்தமான புறக்கணிப்பு தொடர்வதாகத் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

### தமிழ் மக்களின் அதிருப்தி

இவ்வளவு குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து கொண்டு இருக்கும் இவ்வேளையில் ''யுனெஸ்கோ'' வின் செயற்பாடு பற்றிய கவலையும் அதிருப்தியும் தமிழ் மக்களால் முன் வைக்கப்பட்டுள்ளது.

### தமிழ் மக்கள் கேட்பதில் நியாயமிருக்கிறது

உலகெங்கும் மறைந்து கிடக்கின்ற கலை, கலாசார வரலாற்றம்சங்களை வெளிக் கொணர்வதிலும், பாதுகாப்பதிலும் யுனெஸ்கோ (15 ம் பக்கம் பார்க்க)

# கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம்

தேவர்களின் தாசன், மனிதருள் இரத்தினம், படிப்பாற்றல், பரந்த மனப்பான்மை, குளிர்மையான கனிவான பேச்சு, தொழிலாளர் நேசம், பண்பாடறிந்த ஆசிரியர், அதிபர், சட்டத்தரணி, எழுத்தாளர், ஆராய்ச்சியாளர், தமிழன்பர், பெருங்கொடையாளர். தாராள மனப்பான்மையினர், தியாக சிந்தை உடையவர் என்றெல்லாம் அடுக்கிக் கொண்டு போகலாம்.

இலங்கை வரலாற்றைத் துருவி ஆராய்ந்து, பிற நாட்டார் ஊடுருவலால் உண்டான நிகழ்வுகளை வைபவ ரீதியாகக் கட்டுரை வடிவில் எழுதி ஆங்கிலேயர்களையே வியக்கவைத்த மூதறிஞர் அவர்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு எங்கே நடந்தாலும் அங்கெல்லாம் பறந்து சென்று, அவையில் முந்தியிருந்து முத்தமிழின் சிறப்பை முறுவலோடு பேசிச் சிறப்பித்தவர் அவர்.

கனிவான பேச்சும், குரலும், போக்கும் உடைய இவர் தம் உரிமை என்னும் மாண்புடைய மனைத்தக்கால் எலிஸின் அம்மையாரின் நினைவாகத் திருநெல்வேலியில் நூலகம் அமைத்தமை பெரிய அறம்.

கலாவிநோதர் ஆனந்தக் குமாரசுவாமி 500 கட்டுரைகள் எழுதினர் என்றால் இவர் 200 வரையில் எழுதி உள்ளார். யாழ்ப்பாணம் தந்த அறிவாளியாய இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆரம்பப் படிப்பும், பின் கொழும்பில் சென். யோசேவ், சென். தோமஸ் கண்டு, பல்கலைக்கழகக் கல்லூரி, சட்டக் கல்லூரி கண்டு பட்டங்கள் பெற்றவர்.

ஊவா, வெஸ்லி, சென். சேவியர் கல்லூரிகளைக் கட்டியவிழ்த்தவர், சிறந்த நிர்வாகியுமாவர்.

பதினேழாம் வயதிலேயே தலைசிறந்த ஆங்கில எழுத்தாளராய்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பவனி வந்தவர். வர்த்தகம், வணிகம் நன்கறிந்தவர். அரசியலில் ஈடுபட்டுப் பூரண சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர். சூரியமல் இயக்கத்துக்கு முன்னரே வெள்ளைக்காரரின் கொடித்தினத்தை ஒன்றி ஒதுக்கல் செய்தவர்.

நம்மவர் ஒருவர் நம் பண்பாட்டைப் பலருமறிய எடுத்துக் கூறுபவர் என்று நாம் பெருமைப்பட்டிருக்கும்போது, நம்மைத் தலைகுனியச் செய்தாற்போல் எம்மை விட்டுப்போனமை வருத்தத்துக்குரிய தாகும். இனி யார் இவரைப்போல் இனிக்கப் போகிறார்கள்?

நன்றி: மில்க்வைட் செய்தி

# நமது நோக்கு

## ஏன் இந்தப் புறக்கணிப்பு?

தமிழ் மொழிக்கு சம வுரிமை, தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என அரசியல் வாதிகள் மேடைகள் தோறும் முழங்குகின்றனர்! வானொலி தொலைக்காட்சி மேலும் அதற்கு வக்காளத்துப் பாடுகின்றது. ஆனால் இவைகள் எல்லாம் வெறும் கொள்கையளவிலும், ஏட்டளவிலும் இருப்பதுடன் பாரம்பரிய எமது தமிழ் கலாசாரத்திற்கு இருட்டடிப்பு செய்துவிட்டன என்பதை ''யுனெஸ்கோ நிறுவனத்தின் உலக கலாசாரம் தொடர்பான வெளியீட்டில்'' அப்பட்டமாக வெளிப்படுகின்றது.

பாடல்பெற்ற திருக் கோணேஸ்வரர் ஆலயம், திருக்கேதீஸ்வரர் ஆலயம் மற்றும் கதிர்காமம், முன்னேஸ்வரம், ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் போன்ற பல ஸ்தலங்கள் இந்துக்களின் புனித ஸ்தலமாக, சமய குரவர் காலந்தொட்டு இன்று வரை இந்து மதத்தின் பெருமையை மாத்திரமல்ல, இலங்கையின் பெருமையையும் உலகறிய பறைசாற்றும் வண்ணம் இருந்த போதும், யுனெஸ்கோ நிறுவன உலக கலாசாரம் தொடர்பான வெளியீட்டில் இவை புறக்கணிக்கப்பட்டதன் காரணம் என்ன?

இராவணேஸ்வரன் காலத்து அழியாச் சின்னங்களான திருக்கோணமலை கன்னியா வெந்நீரூற்று கோணேஸ்வரர் புனித ஆலயத்தில் அமைந்துள்ள ''இராவணன் வெட்டு'' மற்றும் புனித சின்னங்கள், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள சோழ அரசர் காலத்து கற்கோயில்கள் மற்றும் இன்றும் காணப்படும் தமிழர் பாரம்பரிய அழியாச் சின்னங்கள் போன்ற அரிய கலைப் கிஷங்கள் பல இருந்தும் அவைகள் அக்கலாசார வெளியீட்டில் இடம்பெறுமல் புறக்கணிக்கச் செய்ததை எந்தவொரு தமிழ் மகனின் இதயமும் ஏற்றுக் கொள்ளாத அதேவேளையில் தமிழ் சமுதாயத்தின் மத்தியில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அநுராதபுரம், சிகிரியா, கண்டி, காலி போன்ற பிரதேசங்கள் உலக கலாசார வெளியீட்டில் சேர்க்கப்பட்டுள்ள அதேவேளையில், தமிழர் பாரம்பரிய தொன்மை மிக்கதும் சரித்திரத்திற்கு முற்பட்டதுமான திருக் கோணமலை மற்றும் மன்னார் மாதோட்டம் போன்ற பாடல் பெற்ற ஸ்தலங்கள் உள்ள தமிழ் பிரதேசங்கள் உலக கலாசார வெளியீட்டில் சேர்க்கப்படாமை தமிழ் பேசும் மக்களைப் பெரும் வியப்பிலாழ்த்தியுள்ளது.

தமிழர் பாரம்பரிய கலாசாரங்களைப் பேணிக் காக்கவும், அவற்றை உரிய வேளையில் உலகறியச் செய்வதற்கும் தமிழ் அதிகாரிகள் இன்மையே இன்றைய இவ்வகையான இருட்டடிப்புக்குக் காரணமாக இருக்கலாம் என உணரக் கூடியதாக இருக்கின்றது.

மேலும் இவ்வகையான பாராமுகம் தொடர்ந்தும் நிகழாவண்ணம் இருக்க இந்து கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு மற்றும் உலக இந்து ஸ்தாபனங்கள் ஆகியன உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்கூறும் நல்லுலகம் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றது.


**இந்து கலாசாரம்**

(இந்து சமய திங்கள் இதழ்

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 30.00 |
| ஆறு மாதம் | ரூ. | 15.00 |
| மூன்று மாதம் | ரூ. | 7.50 |
| தனிப் பிரதி | ரூ. | 2.00 |

விவரங்களுக்கு:—

நிர்வாகி,
இந்து கலாசாரம்,
39/23, நெல்சன்
ஒழுங்கை, கொழும்பு 3.

**அன்பர்கள், ஆதரவாளர்கள், வாசகநேயர்கள் மற்றும் தமிழ்ப்பேசும் பெருங்குடிமக்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள் !**

**அமைதியாகவும், ஆனந்தமாகவும், மனநிறைவுடனும் தமிழ்ப்பெருங்குடி மக்கள் மத்தியிலே பொங்கல் விழா மிகவும் சிறப்புற கொண்டாடப்பட்டது.**

# பொங்கும் மங்களம் எங்கும் தங்குக !

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே உதயமானது எமது தமிழர் சமுதாயம். முன்தோன்றிய மூத்த குடிமக்கள் பண்டைய காலந்தொட்டே பாரம்பரிய பல திருநாட்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர். தமிழர் திருநாளில் தலையாயமிக்கதும் தலைசிறந்ததும் தைப்பொங்கல் திருநாளாகும்.

தமிழர் ஆண்டு மலர்வது சித்திரை மாதமானாலும், இன்னல் நீங்கி இன்புற்று வாழ தை மாதம் தமிழரின் தனித்துவமிக்கதொரு மாதமாகும். ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது நமது முன்னோர் மொழி. தை பிறந்தால் உத்தராயணம் தொடங்குகிறது. தை மாதம் சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கிறது. இதனால் தை மாதம் முதல் நாளை மகர சங்கராந்தி என அழைப்பது தமிழர் மரபு.

உலக ஜீவராசிகள் உயிர் வாழ இன்றியமையாதது சூரியன். அத்துடன் பயிர்கள் செழிப்புற்று வளர்வதற்கும் சூரியன் மிகவும் அத்தியாவசியமொன்றாகும்.

ஆடியில் உழுது விதைத்த நெல்மணி மாரியில் பூத்து கதிர் முற்றி, பருவப் பெண்கள் நாணி நிலம் நோக்குவதைப் போன்று தலை சாய்த்து நிற்பது தை மாதத்திலாகும். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அயராது உழைத்த உழவர் மனம் உவகையில் பூரிப்படைய எம்மை வாழவைக்கும் தெய்வத்திற்கு உபகாரமாக முதலில் அறுவடையில் கிடைத்த அரிசியையும் பாலையும், சர்க்கரையையும் சேர்த்து ஆதவனுக்கு அமுது படைத்து அவனது அனுக்கிரகத்தைப் பெற்றுச் சுற்றத்தாருடன் உண்டு மகிழும் நந்நாளே உழவர் திருநாளாம்.

**நாகன் ஹரிதாஸ்**

உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர், அவர்களே நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படுபவர்களுமாவார்கள். அதனை வள்ளுவர்

''உழவர் உலகத்தார்க்கு
ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம்
பொறுத்து''

என அவர்கள் பெருமை பாடியுள்ளார்.

அழகிய கோலத்தின் நடுவே அடுப்பு மூட்டி புதுப் பானையின் கழுத்திலே மாவிலை, பூ, மஞ்சள், இஞ்சி போன்றவற்றை மாலையாகக் கட்டி அடுப்பிலேற்றி இன்முகத்துடன் அதில் பாலினையும் ஊற்றுவாள் இல்லத்தரசி. பால் பொங்கியதும் அரிசி, பயறு, சர்க்கரை, பழம் மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பவற்றை இட்டு, பொங்கியதும் சங்கொலி பரப்பி குதூகலத்துடன் ஆதவன் உதயமாகும் வேளையில் அவன்றிசை நோக்கி அமுது படைத்து அவனருள்பெற்று அகமகிழ்வர்.

இன்று உழவர் பெருமக்களுக்கு ஒப்பாக உலகில் எவருமில்லை. உழவுத் தொழிலுக்கு ஈடிணையாக எத்தொழிலுமில்லை எனலாம். மேலும் அதனை ஔவையார்:

''ஆற்றங் கரையின் மரமு
மரசறிய
வீற்றிருந்த வாழ்வும்
விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்
கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர்
பணிக்கு''

என கவிநயத்தில் அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

## மாட்டுப் பொங்கல்

பொங்கல் பண்டிகைக்கு மறுநாள் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

குழந்தைக்கு அன்னை பால் தருகிறாள். ஆனால் பசுவோ இனமத பேதமின்றி அனைவருக்கும் பால் தருகிறது. இதனால் பசுவை மாதா என அன்னைக்கு ஒப்பாக அழைக்கப்படுகின்றது. மாதா எவ்வாறு தெய்வமாக மதிக்கப்படுகின்றாரோ. அதேபோல் பசுவும் இந்து மக்களால் தெய்வமாக மதிக்கப்படுகின்றது.

புதுமனை புகுதலின் போதும், கல்யாணமான புதுமணத் தம்பதிகள் தனிக்குடித்தனம் போவதற்கும் காமதேனு எனும் தெய்வத் தன்மை பொருந்திய பசு இந்து மக்கள் மத்தியில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. பண்டைய காலத்தில் மன்னர்கள்கூட பசுக்களைக் காப்பாற்ற தம்முயிரையே அர்ப்பணித்துள்ளதாக வரலாறு கூறுகிறது.

ஏர் மூலம் வயல் உழுவதற்கும், அறுவடைசெய்த நெல் மணிகளை இல்லத்திற்கு எடுத்துச் செல்லவும் மற்றும் இதர வேலைகளுக்கும் மாடு உழவனுடன் அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்து நிற்கின்றது. அத்தகைய பெருந்தகைக்கு நன்றிக்கடன் செலுத்துமுகமாகவே மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

மாடுகளைப் பெருஞ்செல்வமாக, நல்ல சகுனத்தின் அறிகுறியாக கருதும் தமிழ் மக்கள் மாடுகளைக் குளிப்பாட்டி சுத்தம் செய்து குங்குமத் திலகமிட்டு பூ, வடை போன்றவற்றால் மாலை அணிவித்து ஊர்வலம் சென்று அதன் பெயரில் பொங்கி அதற்கு அன்புடன் அமுதூட்டி அகமகிழ்கின்றனர்.

இவ்வாறு, பொங்கல் திருநாள் தமிழ் மக்களுக்கும் மாடுகளுக்கும் உரிய ஒரு திருநாளாக விளங்குவதுடன், புத்தரிசியெடுத்து

(13 ம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பகுதி

# பாலவிகாஷ்

அன்புள்ள தம்பி தங்கைகளே!

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை நீங்கள் அனைவரும் மிகவும் சிறப்புற கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள்!

எத்துணை இன்னல் வரினும் கல்வியை சிறப்புறக் கற்று, நமது இனிய தமிழுக்கும் நாட்டிற்கும் பெருமை தேடித்தரும் நாளைய சமுதாயமாகிய உங்களுக்கு எனது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

உங்கள் அன்பு அக்கா

**அமரா**

---

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## சுற்றுடற் கல்வி

உதாரணமாக மாணுக்கர் தமது பாடசாலைக்குப் பக்கத்திலுள்ள நீர் நிலைகள் கட்டடங்கள் முதலியவற்றிலுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்களின் உபயோகம், பொருட்கள், அவ்விடத்திற்கு வந்த அல்லது அவ்விடத்தை விட்டகன்ற காரணங்கள், சூறுவளி முதலான பௌதிகக் காரணங்கள் அல்லது சமுக நடத்தை முதலானவை. காலம், உயரம் முதலானவற்றை உத்தேசித்தல், தாவரங்களின் இலைகளைக் கண்டறிதல், பாலுள்ள இலைகளைப் பிரித்தறிதல், சிலைகள் முதலானவற்றிலுள்ள பெரியார்களைப் பற்றியும் அவர்கள் சமூகத்திற்கு அல்லது பாடசாலைக்குத் செய்த சேவைகளைப் பற்றியும் புத்தகங்களை வாசித்து அல்லது முதியோரிடம் விசாரித்தறிதல், மழையினல் எற்பட்ட தண்ணீரைப் பள்ளத்திற்கு செலுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்தல், பாடசாலைக்குப் பக்கத்தில் நடைபெறும் போக்குவரத்து முறைகளைக் குறித்துக் கொள்ளுதல் முதலான ஏராளமான தொழிற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

இத்தகைய தொழிற்பாடுகளிலிருந்து மாணுக்கன் சுயமாகச் சிந்திக்கவும், மகிழ்ச்சிகரமாக இயங்கவும் வழி ஏற்படுகின்றது. பழைய காலத்தைப் போன்று ஆசிரியர் சொல்பவற்றை எவ்வித விளக்கமுமில்லாமல் அப்படியே மனனம் செய்து ஒப்புவிக்கின்ற கல்வி முறையில் மாணவனின் சிந்தனை தடைப்படுகின்றது. அத்துடன் கட்டுப்படுத்தப்படுகின்றது. பிறர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் செய்து பார்த்து, அனுபவமே சிறந்த ஆசான் என்பதற்கிணங்கத் தமது நேரடி அனுபவங்களைக் கொண்டு விசாரித்தும் திடமானஅபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும், ஆக்கச் சிந்தனையை மாணுக்கரிடையே வளர்ப்பதற்கும் சுற்றுடற் கல்வி உதவுகின்றது.

(தொடரும்)

# சிவானந்தாமிர்தம்

1. அதிகாலை ஈஸ்வர தியானத்திற்கு நல்லது.
2. வடக்கு அல்லது கிழக்கி நோக்கி இருத்தல் நன்று.
3. அரைமணி நேரமாவது சுகாசனத்தில் இருக்கவும்.
4. அந்த நேரத்தில் சித்தத்தை இறைவனிடம் வைக்கவும்.
5. பழகப் பழக மூன்று மணி நேரம் தியானஞ் செய்யவும்.
6. விருப்பமான இறை மந்திரத்தை ஓதவும்.
7. மந்திரத்தை 108 முதல் 21,600 தரம் வரை சொல்லலாம்.
8. சுத்தமானஉணவையே உண்ண வேண்டும்.
9. தியானத்திற்குத் தனி அறை மிகவும் நல்லது.
10. இயல்புக்கேற்ற அளவு தருமம் செய்யவும்.
11. நல்ல நூல்களைத் தினமும் பாராயணம் செய்யவும்.
12. வீரியத்தைக் கவனமாகக் காப்பாற்றவும்.
13. வீரியமே சர்வசக்தியும் ஐஸ்வரியமுமாம்.
14. தோத்திரப் பாடல்களை மனப்பாடம் செய்க.
15. தீயவர் இணக்கத்தைத் தவிர்த்துவிடவும்.
16. புகை பிடித்தலைக் கண்டிப்பாக விலத்திவிடவும்.
17. மதுபானத்தை அறவே தவிர்த்துவிடவும்.
18. ஏகாதசி நாளில் உபவாசமிருக்கவும்.
19. விரத நாள்களில் பால் பழம் உண்ணவும்.
20. ஜபம் செய்வதற்கு மாலையொன்று வைத்திருக்கவும்.
21. தினமும் சில மணி நேரம் மௌனமாயிருக்கவும்.
22. எவ்வித துன்பத்திலும் உண்மையையே பேசவும்.
23. நாளாந்த தேவைகளை வெகுவாகக் குறைக்கவும்.
24. எவருக்கும் எவ்வித தீமையும் நினைத்தலும் ஆகாது.
25. கோபத்தை அன்பினுல் அடக்குதல் நல்லது.
26. பிறர் குற்றத்தைப் பொறுமையால் மன்னிக்கவும்.
27. இயன்றளவு தன்வேலைகளைத் தானே செய்தல் நல்லது.
28. பகலில் செய்த குற்றத்தை இரவில் நினைத்தல் நல்லது.
29. தான் செய்த குற்றத்துக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்க.
30. இயன்ற அளவு பற்றுக்களைக் குறைக்கவும்.
31. உள்ளதை இல்லாதவருடன் பங்கிட்டுக் கொள்க.
32. என்றும் பணி செய்ய ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.
33. என்றும் இனிய சொற்களை அளந்து பேசுக.
34. கடவுளை அடைவதற்கு தீவிர ஆசைகொள்க.
35. ஆத்மிக பாதைக்கு ஒரு குருவைத் தேடிக் கொள்க.
36. ஒரு நல்லவழி காட்ட அதன் வழி நடப்பதே மேல்.
37. வீண்பேச்சையும் அதிக தூக்கத்தையும் விடுக.
38. இன்று செய்யவேண்டியதை இன்றே செய்து முடிக்கவும்.
39. ஒருபோதும் தற்புகழ்ச்சி செய்து கொள்ள வேண்டாம்.

(15ம் பக்கம் பார்க்க)

# காலத்தின் கோலம்!

**அன்புள்ள தம்பிக்கு!**

இன்று எமது சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள அவல நிலையை எண்ணும்போது மனம் குமுறுகின்றது. வேதனையால் மனம் வெதும்புகின்றது.

ஏனைய மதங்களுக்கு வழிகாட்டியாக இருந்த நமது இந்து மதம் பண்பு கெட்டு, ஒழுக்கங்கெட்டு பாதை மாறி சீரழிகின்றது.

இதற்கு காரணம் இன்றைய சமுதாயத்திற்கு இந்து மதம் ஒழுங்கான முறையில் போதிக்கப்படுவதில்லையென உணரக் கூடியதாக இருக்கின்றது.

இந்து மதம் போதிப்பதை விரிவுபடுத்துவதுடன் நற்பண்புகளையும், நல்லொழுக்கங்களையும் நவின்றுரைக்க வேண்டும்.

அன்பு, பண்பு, ஒழுக்கம் போன்றவைகளை அனைத்து சமயங்களும்அன்றுதொட்டு அறிவுறுத்தி வருகின்றன. மகான்களும் தத்துவஞானிகளும்கூட பண்டைக்கால முதல் இவற்றுக்கு மகத்துவமளித்து வருகின்றனர்.

அகிலத்தையே நொடிப்பொழுதில் அழிக்கக் கூடிய அணுவினாலும் அசையாதது அன்பினால் அசையும் அந்தளவு அளப்பரிய ஆற்றல் அன்புக்கு உண்டு. அன்புள்ளம் கொண்ட அனைவரிலும் இறைவன் இரண்டறக் கலந்து நிற்கின்றான். அன்புள்ளம் கொண்டவனுக்குத் தெய்வீகம் நிரம்பிய சிறப்பான அமைதியான வாழ்வு கிட்டுகிறது. அக மகிழும் அமைதியான வாழ்வுக்கு அன்பு அவசியம்.

அன்பே சிவம்!

வாழ்க்கை வேறு சமயம் வேறு எனக் கருதுதல் தவறு. வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததுதான் சமயம். வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும் சமயந்தான் என்பதை பட்டினத்தார் உட்பட நாயன்மார்கள் அனைவரும் பல்வேறு போதனைகள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இறைவனை வணங்குவதால் மனம் ஒருநிலையடையும், தூய்மையடையும், சிந்திக்கும் ஆற்றல் தூண்டப்படுகின்றது. அன்பு சுரக்கின்றது. அவனது வாழ்க்கையும் வலிமையடைகின்றது.

''இறைவனை வணங்குகிறேன். அதனால் என்னுடலை சுத்தமாக வைத்துக் கொள்கிறேன். பகுத்தறிவின் மூலம் உண்மையைக் கண்டுபிடிக்கவும் இறைவனே என்னைத் தூண்டுகின்றான். என்னால் இருக்கும் தீயவற்றை அழித்து அன்பு பூண்ட மனிதனாக என்னை மாற்றிக் கொள்ள முயற்சிக்கிறேன். இறைவனே என்னை வலிமையுள்ளவனாக மாற்றுகிறான். அந்த வலிமையை எனது செயலில் காட்டுவேன்'', என கவிஞர் தாகூர் அவர்களும் அதற்கு மேலும் சான்று பகர்கின்றார்.

உலகமே இன்று பயங்கரவாதத்தால் ஆட்கொள்ளப்பட்டுள்ளது. காட்டுமிராண்டித்தனமும் காடைத்தனமும் அமைதியான வாழ்விற்கு பங்கம் விளைவிக்கின்றன. நீதி, நேர்மை அனைத்தும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன. இத்தகைய நெறியற்ற வாழ்க்கையால் உலகமே இன்று அழிவை நோக்குகிறது.

உண்மையை பகிரங்கமாக எடுத்துக் கூறுபவனது உயிருக்கு இன்று உத்தரவாதமில்லை. சத்தியத்திற்கே சோதனை ஏற்படும் காலமிது. நியாயம், நேர்மை தடம்புரள்கின்றது நேர்வழி சென்று நியாயம் கற்பிப்பவனது உடலைக் குண்டு துளைக்கிறது.

துப்பாக்கிகளுக்கும் குண்டுகளுக்கும் இன்று பஞ்சமில்லை. கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, அபகரிப்பு போன்ற கொடுஞ்செயல்கள் நாட்டில் நடக்காத நாளில்லை. வஞ்சகமிகு இவ்வுலகில் நயவஞ்சகர்களும், நம்பிக்கைத் துரோகிகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயிருக்கிறார்கள். ஏமாற்றுப் பேர்வழிகள் மலிந்து கிடக்கும் உலகமிது.

பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகிறார்கள். பெண்மைக்கு இலக்கணமாக, உயிரிலும் மேலாக பாதுகாக்கப்படும் பெண்மையின் கற்பு கயவர்களாலும் காமுகர்களாலும் மிருகங்களைவிட கேவலமானமுறையில் சூறையாடப்படுகின்றது.

உலகிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் சிறந்தது தாய்மையே! தாயில்லாமல் எவருமே தானே உருவாவதில்லை.

''தாயிற் சிறந்ததொரு
கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்கதொரு
மந்திரமுமில்லை''

என்பது முதுமொழி.

தாய்ப்பாசம் தன்னிகரற்றது. தாயும் பெண்தான்; தாரமும் பெண்தான். ஆனால் இவர்களுக்கிடையில் பாரிய வேறுபாடு உண்டு.

தாய்மைக்கு தலை வணங்க வேண்டியது தலையாய கடமை, ஆனால் இன்றோ தாய்க்குலமே பரிதவிக்கின்றது. தங்களது பெண்மையை பாதுகாப்பதில் எத்தனையோ சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்க வேண்டியவர்களாய் அல்லலுறுகின்றனர். கற்பை இழந்தவள் வாழ்வில் நடைப்பிணமாகின்றாள். சாக்கடையில் தள்ளப்படுகின்றாள்.

கற்பை சூறையாடும் கயவர்களுக்குக் கடுந்தண்டனையை சட்டம் வழங்கிடுமா?

காமுகனால் கற்பையிழந்த கன்னியின் வாழ்க்கையும் ஒளிமயமாக அமைய, சமூகம் சம அந்தஸ்து வழங்கிடுமா?

காலம் இவைகளுக்கு தக்க பதில் கூறுமா?

கற்புக்கரசி கண்ணகி தெய்வம் மறு அவதாரம் எடுக்கப்பட வேண்டிய காலமிது!

மனிதன் தான் ஆறறிவு படைத்தவன் எனத் தன்னைத்தானே உணரும்போது சமூகம் தானாகவே திருந்திவிடும். மனிதன் சுயமாகவே தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். வெறும் உணர்வுகளுக்கு மாத்திரம் அடிமையாகக் கூடாது. சரி பிழை உணரக்கூடிய தூய மனோ நிலையை அடைய வேண்டும். எதிலும் மனவுறுதி வேண்டும். மனம் பக்குவமடைய வேண்டும்.

அப்போது சிந்திக்கும் ஆற்றலை மனிதன் இயல்பாகவே பெறுகின்றான். உயிர்களை உயர்வாகக் கருதுகின்றான். அன்புக்கு மதிப்பளிக்கின்றான்.

(தொடரும்)

இப்படிக்கு

**அண்ணாவியார்**

# பாரதீய பரமார்த்த வாஹினி

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உணர்ச்சிகளிலும், உன்னுள்ளத்தினின்று பொங்கியெழும் ஆனந்தத்திலும், உன் சாதனையின் விளைவால் வெளியெழும் மகிழ்ச்சியிலும் ஆழ்ந்திரு. பிறர் உன்னை அவ்விதமாக விருத்தலைத் தடுத்தாலும், எந்தவிதமான எதிர்த் திட்டங்களை உனக்கு வகுத்தாலும், உன் உயிருள்ளவரை உரமாக அவைகளை எதிர்த்து நில். எக்காரணத்தைக் கொண்டும் தெய்வீக உணர்ச்சியை, தெய்வீகப் பரவசத்தை நீ உவக்களிக்க மறுக்காதே. பாரதியர்களின் பரமார்த்த வாஹினியின் மூலம் எதிரொலிக்கும் ஊக்கக் குரல் இதுவே. அமைதியையும், வலிமையையும் அளிக்கும் இந்நாட்டின் கலாசாரத்தின் தடையற்ற தென்றலைத் தடுக்கும் தடைகள் யாவையும் தகர்த்திடெறி. அது பாய்ந்தோடும் கால்வாய்களைத் தடைகளைந்து சுத்தம் செய். பிறகு அது தங்கு தடையின்றி நேர்வழி நோக்கிப் பாய்ந்தோடும்.

இப்பாரத நாட்டின் சாதனை இவ்வழியைத்தான் பின்பற்ற வேண்டுமென்று, சாய் பகவான் நிர்மானித்துள்ளார். 'கடவுளுண்டு' என்ற இந் நாட்டின் தர்ம கோட்பாடு அதிக ஆண்டுகளாக மேல் நோக்கிச் செல்லாமல் தடைபட்டுக் கிடக்கின்றது. அதனுடைய சிறப்புக் கூறு வெகு காலமாக அசையா நிலையைப் பெற்றுள்ளது. இப்பொழுது அது விசைத்திறப் பெற்றிருக்க வேண்டும். அது ஒவ்வொரு மானிடனின் தினசரி வாழ்க்கையை ஊக்குவிக்க வேண்டும். அது ராஜபவனம் மாளிகையிலும், பரம ஏழையின் குடிசையிலும் உட்புகுந்து பலனளிக்க வேண்டும்.

அதுஒவ்வொருவருடைய பொருட்குவை. ஒவ்வொருவரும் அதை மரபுரிமையாகப் பெற்றுப் பயன் காண நேர்மையுண்டு. அக்காரணத்தினால் பாரதியர்கள்அதை ஒவ்வொரு இல்லத்திற்கும் கொண்டு சென்று அங்குள்ள யாவரும் அதில் பங்கேற்று அனுபவிக்கச் செய்ய வேண்டும். நாம் சுவாசிக்கும் காற்று எப்படி எல்லோருக்கும் பொதுவானதோ அது போலவே கடவுள் உணர்வு, கடவுள் சக்தி, கடவுள் அருள் என்ற தர்மம் எல்லோருக்கும், பொது. எல்லோருக்கும் கிட்ட வேண்டும். பாரதியர்கள் இந்தப் பரந்த நோக்கத்தைக் கைவசமாகக் கொள்ள வேண்டும். அவ்வாறு அந்நோக்கத்தை இறுகப் பிடித்தால், எல்லாவற்றையும் உட்படுத்திய ஒற்றுமையைத் தத்துவத்தினால் பலசமயங்களிலுள்ள கருத்து வேற்றுமைகளும், நம்பிக்கைகளும் தாமாகவே மறைந்தொழிந்து அமைதியும், அன்பும் இப்புவியின் மேல் திரும்பவும் நிலை நாட்டப்படும்.

நூற்றுக்கணக்கான 'வருடங்களாக இருள் சூழ்ந்த ஒரு வீட்டை மனத்தில் கொள்ளுங்கள். நீங்கள் அவ்வீட்டினுள் நுழைந்து, அவ்வீட்டை விட்டகல வேண்டுமென்று இருளிடம் பிரார்த்தனை செய்யலாம், அல்லது பல நாட்கள் அவ்விருளின்மீது வசை பாடலாம், அல்லது வல்லந்தச் செயல்களில் ஈடுபடுவதாக அவ்விருட்டை மிரட்டலாம் ஆனால் இருள் இருந்தே தீரும்; சற்றேனும் குறைவுபடாது. அது நம் நுண்ணயமுறைகளுக்கு அசைந்து கொடுக்காது. அதைப் பயமுறுத்தி வெளியேறவும், செய்ய வியலாது. ஆனால் ஒரு சிறு விளக்கை ஏற்றினால் அக்கணமே அது ஓடி மறையும். ஞான ஒளி ஊழிக்கால இருட்டிலிருந்து மனிதனைக் காக்கும். இவ்வுண்மையை மனிதன் நன்கறிய வேண்டும். அவ்வாறு நன்குணர்ந்து மனிதன் தன் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

மனிதனுள் பெருமளவில் சக்திகள் நிறைந்துள்ளன; இதுவே பாரதியர்களின் கருத்து. மனிதன் தன்னைக் கீழ்நிலையில் வாழுமாறு தண்டிக்கப்பட்டவன் என்று கருத்தில் கொண்டிருப்பது புதிராக விருக்கிறது! ஒருவன் சுரகுணம் பொருந்தியவன் அல்லது அசுர குணம் கொண்டவனென்று நாம் எண்ணலாம். ஆனால் இருவர்களுக்குள்ளும் ஒரே அளவில் பொருந்தியிருப்பது ஆத்மா என்பது பேருண்மை. ஒருவனிடத்திலிருக்கும் ஆத்மா மற்றொருவனிடத்திலுள்ள ஆத்மாவைவிடக் குறைவுபட்டதென்று சொல்லுவதற்குஇடமில்லை. எவராவது ஒருவரிடத்தில் குறைகள், குற்றங்கள் காணப்படின் அது அவரிடத்தில் தங்கிய நேர்மையின் குறைபாடு. அவ்வளவே. ஆனால் அவரிடத்தில் தெய்வீக ஆத்மா குடியிருக்கவில்லையென்று முடிவுகட்டாதே. அவர் பழகும் சமுதாயத்தின் குறைகளினாலோ அல்லது அவரது நண்பர்களின் பழக்க தோஷங்களினாலோ அவரிடம் பிழைகள் பல வளர்ச்சியடைந்திருக்கலாம். ஆனால் அவருடைய இயற்கையான ஆத்மா பாதிக்கப்பட்டதாகக்கொள்வது சரியன்று. அவருக்கு நல்லிணக்கம், நற்பயன், பயக்கும் சூழ்நிலை இவைகளை உருவாக்கி அவைகளில் அவரைப் புகும்படி வற்புறுத்தி இணங்கச் செய்வதே நன்முறை. கெடுதல்கள் யாவும் அவர் உடன்பிறப்பு, அக்காரணத்தினால் அவரைச் சீர்திருத்துவதென்பது இயலாத காரியமென்று ஒதுக்குவது கூடாது. இவ்வுடல் பல நுண்ணிய உயிரணுக்களால் ஆகியவை அணுக்களும் பருப் பொருளியலான தனிச் சிறப்புக்குரிய, காணற்கரிய நிகழ்ச்சி அல்லது சம்பவம். அவைகள் அடிப்படையான ஜடப் பொருள்கள், அல்லது கலவை அல்லது உணர்ச்சியற்றவைகள்; மற்றவைகள் இப்பூத உடலைக் கடந்த ஒரு சூக்ஷ்ம உடலிருப்பதாக வேதாந்திகள் மொழிகின்றனர். அவ்வுடலும் பருப் பொருளைச் சார்ந்தது தான். அது நுட்பமான திறன்களுக்கும், சக்திகளுக்கும் மையம். அந்த விடத்தில்தான் சூக்ஷ்மமான மன உணர்ச்சிகளும், பதட்டங்களும் நிகழ்கின்றன. சக்திகள் ஒவ்வொன்றும் பருப்பொருள் வாயிலாகத்தான் வேலை செய்ய இயலும். பருப்பொருளான இவ்வுடலை இயக்கும் அதே சக்திதான் சூக்ஷ்மமான உணர்ச்சிகளுக்கும், மனவெழுச்சிகளுக்கும், எண்ணங்களுக்கும் ஆதாரம். அவைகள் வேறுபட்ட இரண்டு சக்திகளல்ல. ஒன்று மற்றொன்றின் சூக்ஷ்ய நிலை, அவ்வளவே.

(9ம் பக்கம் பார்க்க)

# உருத்திராட்ச மகிமை

சிவ சின்னங்களின் மிகச் சிறப்பானது உருத்திராட்ச மாகும். இது ஒரு வகை மரத்திலிருந்து பெறப்படுவ தாகும்.

உருத்திரன் + அக்கம், அதாவது உருத்திரனின் கண்ணிலிருந்து தோன்றிய மணிகளே உருத்திராட்சம் என்கிறது தேவியாகவதம், சிவனின் கண்ணில் தோன் றிய கண்ணீர் மண்ணில், விழ்ந்து மரமாக முளைத்தன அவை முப்பெத்தெட்டு வகையான ருத்திராட்சங் களை உருவாக்கின.

ஈசனின் கண்கள் மூன்று கும். சூரிய விழி (வலது), சந்திர விழி (இடது), தவிர முக்கண் முதல்வனின் நெற் றிக் கண்ணுன அக்கினி விழி யாகிய மூன்றுவது கண் ணும் அடங்கும். சூரியக் கண்ணிலிருந்தும் பன்னி ரண்டு வகை கபில நிற மணிகளும், இடது கண்ணி லிருந்து வெண்ணிற மணி கள் பதினறு வகையும், நெற்றிக் கண்ணிலிருந்து பத்து வகை கரு மணிகளும் தோன்றினவாம்.

நகரங்களில் காஞ்சியும், நதிகளில் கங்கையும், ரிஷி களில் காசியப்பரும், கிரகங் களில் சூரியனும், குதிரை களில் உச்சைஸ்ரவமும், தேவர்களில் மகாதேவரும், தேவிகளில் கௌரியும், புருஷர்களில் விஷ்ணுவும் எவ்வாறு சிறப்பானவர் களாகக் கருதப்படுகிருர் களோ அந்தளவுக்கு மணி களில் மகத்தானது ருத்தி ராட்சமாகும்.

ருத்திராட்ச மணியைக் கண்ணுல் காண்பதும், உட ம்பால் ஸ்பரிசிப்பதும், மன தால் நினைத்தலும், நாள் தோறும் செபிப்பதும் கோடானு கோடி பலன் களைத் தரவல்லன. அதை தரித்து நிற்பவன் ருத்ர சொரூபியாகிருன்.

ருத்திராட்சம் பலவகைப் படும். ஏகமுக, இருமுக, மூன்று முக, நான்கு முக, பஞ்ச முக, ஆறு முக, ஏழு முக, எட்டு முக, ஒன்பது முக, பத்து முக, பதினெரு முக, பன்னிரண்டு முக, பதின்மூன்று முக, பதி ஞன்கு முக என அதன் முகங்களைக் கொண்டு வகை ப்படுத்தப்படுகின்றது.

ஒரு முக ருத்திராட்சம் சிவசொருபம், இதை அணிவதால் பிரும்ம விர த்தி பாவம் நீங்கும். இரு முகம் அர்த்த நாரீசுர வடிவாகும். பசுக்களைக் கொன்ற பாவம் நீங்க இதை அணியலாம். மூன்று முகமானது அக்னி சொரூப மாகும். இதன் ஸ்திரிபானம் போக்கிட அணியலாம். நான்கு முகம் பிரம சொரூபம். கொலைபாவத்தி

சந்திரிகா சோமசுந்தரம்

லிருந்து பாதுகாக்கும். ஐந்து முக ருத்திராட்சமானது பஞ்ச அக்கினி வடிவான காலக்கினி ருத்திர சொரூப மாகும். இதனல் மகேஸ் வர இன்பம் கிட்டும். ஆறு முகமானது சுப்பிரமண்ய சொரூபமாகும். வலக் காலில், வலது கையில் இதை அணிவதால் முருக னருள் கிட்டும். ஏழுமுக ருத்திராட்சம் அனந்த ருத்திராட்சமாகும். இத ஞல் சூரியன் அனுக்கிரகம் கிட்டுவதுடன் சகல சம்பத் தும் வசமாகும். எட்டு முகம் கணேச சொரூப மாகும். அஷ்ட பைரவ ரூபமாகக் கருதப்படும். இதனுல் அஷ்ட வசுக்களும் சித்திக்கும். ஒன்பது முக ருத்திராட்சம் பைரவ ருத்தி ராட்சம் எனப்படும். செந் நிறமானது. இதன் தன்மை இதனை இடது கையில் அணிபவர் சிவரூபமாகவே

(14ம் பக்கம் பார்க்க)


நீங்கள் படித்துவிட்டீர்களா?

தேசபக்தன் கோ. நடேசய்யர்

மலையக மக்கள் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்துக்கு வித்திட்டவர் தேசபக்தன்

கோ. நடேசய்யர்

இந்த வரலாற்று ஆய்வு நூலை ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான சாரல் நாடன் எழுதி யுள்ளார்.

மலையக கலை இலக்கிய பேரவையினர் இந்நூலை வெளியிட்டுள்ளனர். ஒவ்வொரு ஆய்வாளரும் அவ சியம் படிக்க வேண்டிய நூல்.

விலை ரூபா 75/–

விபரங்களுக்கு:—

மலையக கலை இலக்கிய பேரவை
57, மகிந்த பிளேஸ்,
கொழும்பு–6.


# மாசில்லா இந்து மதம்

பஜனைகளின் குரல் கேட்ட அந்நாளில்
பக்தியிலே ஒன்று பட்ட சக்தியன்றோ!
பனி மழையில் பாதைக்கொரு வழிகாட்டி
பாடிவந்தோம் பஜனைகளும் மெழுகில் திமூட்டி!
நாமறியோம் வேறு மதம் எமை நாட
நம் முன்னோர் காட்டும் வழியின் மாருக!
நழுவி வரும் புறச்சமயம் எமைமாற்ற
நாமசையோம் அவர் கூறும் இசைக்காக!

பொய்யன்று புகழ் கொண்ட இந்துமதம்
மெய்யென்று காட்டிடுவீர் சைவமக்கள் ஒன்றுபட்டு!
கல்லும் மண்ணும் நதிதோன்ற முன் வந்த
கலை கொண்ட தெய்வமன்றோ இந்து மதம்
மாசில்லா தூய்மை கொண்ட சைவமதம்
பால் மணமாய் மெருகூட்டும் தமிழிடையே
மணம் வீசும் மலையகத்தில் நம் சைவம்
மலர்ச்சி பெற கூடிடுவோம் ஒன்ருக!

மார்கழியில் தேன்மதுரக்குரல் கேட்க
மலையகத்து இளைஞர்களே சேர்ந்திடுவீர்
இந்து இளைஞர் சேர்த்துவிடும் மாநாட்டில்
இனிய புதிய கருத்துகளைவந்து காட்டிடுவீர்
நம் தமிழின் பாரம்பரியம் அழியாமல்
இந்து கலாசாரத்தோடு நீங்கள் இணைந்திடுவீர்
இலங்கைத் தீவில் இந்து சமயம் குன்ருமல்
இயன்றவரை கொடைசெய்யும் சைவ நீதி.

— பீ. கவி மோகன்ராஜ்

# தமிழ்ச் சமய நெறி

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

தமிழ், காலத்தால் மூத்த மொழி; கருத்தாலும் முதிர்ந்த மொழி; தமிழில் இன்றுள்ள முதல் நூல் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல். தொல்காப்பியர் காலம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. இலக்கியம் தோன்றி வளர்ந்த பின்புதான் இலக்கணம் தோன்றும் என்பது மொழிநூற் கொள்கை. தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கண நூலைத் தரத்தக்க அளவுக்குத் தொல்காப்பியத்திற்கு முன் இலக்கிய உலகம் சிறந்து விளங்கி இருக்க வேண்டும். மிகச் சிறந்த இலக்கியங்களைக் காணக்கூடிய அளவுக்குத் தமிழ்மொழி சிறந்திருந்ததென்றால், அம்மொழியைப் பேசி வாழ்ந்த மக்கள் சிந்தனையிலும் செயலிலும் மிக வளர்ந்திருக்க வேண்டும் என்பது உய்த்துணரத்தக்கது. உலகிலுள்ள எல்லா மொழிகளுமே எழுத்துக்கும்சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் பெற்றுள்ளன. அவற்றுள்ளும் எழுத்து, சொல்லிலக்கணங்களிற் கூட முழுநிலை பெற்று விளங்கும் மொழிகள் சிலவே. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கும் இலக்கணங் கண்ட பெருமை உலக மொழிகளில் தமிழுக்கே உண்டு.

வாழ்வதெல்லாம் வாழ்க்கை அல்ல, வாழ்க்கை அருமையானது; பயனுடையது; இன்பத்திற்குரியது என்ற உணர்வுகளுடன் நெறிகளோடு இசைந்து வாழ்தலே வாழ்க்கை என்று தமிழ் வற்புறுத்துகின்றது. ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற காதல் வாழ்க்கையும், அவர்களே சமுதாயத்திற்கும் பயன்படுமாறு வாழும் கற்பு வாழ்க்கையும் அக வாழ்க்கை. சமுதாய வரம்புக்குள் அடங்கி, அரசு வகுக்கும் சமுதாயப் பொது விதிகளுக்கு இணங்கவாழும் வாழ்க்கை புறவாழ்க்கை. சமுதாயத்திற்கு உறுப்பாகச் செய்வன செய்து, துய்ப்பன துய்த்து வாழும் வாழ்க்கை அகவாழ்க்கை. இது,தொல்காப்பியம் காட்டும் முடிவு; இவ்விலக்கண நூல் தோன்றுவதற்கு முன்பே, தமிழ் மொழி பேசும் மக்கள் சிறந்த வாழ்க்கைஉடையவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆயினும், காலத்தின் விளைவுகளால் இங்கும் அங்குமாகத் தவறுதல் தலைகாட்டத் தொடங்கிய உடனேயே வாழ்க்கையைச் செப்பம் செய்யுங் கவலை தமிழ்க் குடியினருக்குத் தோன்றியதன் விளைவு, தொல் காப்பியத்தின் பொருளதிகாரம்.

## வாழ்வை செப்பனிடுவது சமயமே!

வாழ்க்கை, நெறிமுறைகளுக்கு இசைந்தவாறு அமைய வேண்டும் என்ற கவலை அரும்பும் நிலையே சமயத்தின் தோற்றம். இந்நிலையிலேயே சமயம் கால் கொள்ளுகிறது. அங்ஙனமாயின் தொல்காப்பியத்திற்கு முன்பு, தமிழர்க்குச் சமயமில்லையா? என்ற வினாத் தோன்றும். தொல்காப்பியத்திற்கு முன்பும் தமிழ் மொழி பேசிய மக்கள் இறைவழிபாடு செய்து வந்துள்ளனர். அவர்களுடைய வாழ்க்கையில் ஒழுங்குகளும், ஒழுக்கங்களும், சமயநெறிக் கோட்பாடுகளும் இருந்தன. ஆயினும், செப்பமாக வடிவமைப்புப் பெற்றது தொல்காப்பிய காலத்திலேதான். சமயம் என்பதற்குச் செப்பமுறச் செய்யப்பெற்றது, சார்ந்து நின்று ஒழுகுவோரை செப்பமுறச் செய்வது என்பது விளக்கம். சமயம் என்பது கடவுளை வழிபடும் நிலையை மட்டும் வற்புறுத்துவது, அன்று; வாழ்க்கை முழுவதையும் தழுவி நிற்பதே சமயம்.

தமிழ் மொழி, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்த முறை நம்பிக்கைக்குரியது, நல்லெண்ணத்தின்பாற் பட்டது; அறிவார்ந்தது. தமிழ்ச் சமயத்தில் நம்பிக்கைக் கொள்கை உண்டு. ஆனால் நம்பிக்கை மட்டுமேயன்று. தமிழ்ச் சமயநெறி உலகை உயிர்க்குலத்தை, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து கண்டு காட்டும் முடிவுகள் சிறப்புடையன; அறிவிற்கு விருந்தாய் அமைவன. உயிர்கள் அறியாமையிலிருந்து விலக, துன்பத் தொடக்குகளில் இருந்து விலக, சமயம் துணை செய்வது தமிழ்ச் சமயம் உயிரை நம்புகிறது. உயிர், இல்பொருள் அன்று. உயிர் பிறிதொன்றன் விளைவுமன்று. உயிர், கடவுளுமன்று; கடவுளின் ஒரு பகுதியுமன்று, உயிர் கடவுளின் பிரதிபலிப்பு. உயிர் கடவுளாற் படைக்கப்பட்டதுமன்று. அழிக்கக்கூடியதுமன்று. உயிர் கடவுளின் கைப்பாவையுமன்று. உயிர் அறிவுப் பொருள். ஆயினும் உயிர் முற்றுக அறிந்த அறிவுப் பொருளுமன்று. உயிர் ஒன்றல்ல, பலப்பல. அதன் பொதுவகை அறுவகையே! இப்பாகுபாடு அறிவின் அடிப்படையில் அமைந்தது. உயிர்கள் தோன்றியனவுமல்ல; அழியக்கூடியனவுமல்ல, உயிர்களுக்குப் பிறப்புமில்லை; இறப்புமில்லை. உயிர்கள் கடவுளாவதுமில்லை. உயிர்கள் உடலைத் துணைக் கொண்டு அகக் கருவிகள், புறக்கருவிகள் வாயிலாக உலகத்தோடு தொடர்பு கொள்ளுதலையே பிறப்பு என்கின்றோம். இது தமிழ்ச் சமயத்தின் உயிரைப் பற்றிய உயர் தனிக் கொள்கை.

## வாழ்க்கையின் நோக்கம்

உயிரின் இயற்கை வளர்தல்; மாறுதல். உயிர்களின் அடிப்படை இயல்பு துய்ப்பது. துய்த்தலும், இன்புறுதலும், இன்புறுதலும் அவ்வழி வளர்தலும், அன்பு நிலைமை எய்துதலும் உயிர்களின் பிறப்பு வழிப்பட்ட நோக்கம். உயிர்கள் பிறத்தல், இறத்தல் என்பது நேரடியாக உயிர்களைப் பற்றியதல்ல. உயிர், தன்னுடைய வளர்ச்சிக்குத் துணையாக உடலைத் துணை கொண்டு அறிகருவிகள், செய்கருவிகள் வாயிலாக உலகத்தோடு பொருந்துதலும் நீங்குதலுமே பிறப்பு ஆகும். இங்ஙனம் அறிகருவிகளையும் செய்கருவிகளையும் உடைய உடம்பினோடு உயிரைப் பொருத்திப் பிறப்பு வாழ்க்கையோடு இணைத்தலே படைத்தலாகும். உடலைப் பெற்ற உயிர்கள் துய்ப்பனவும் உய்ப்பனவும் பெற்று வளரச் செய்தலே காத்தலாகும். வாழ்க்கையில் துன்பச்சுமை குறைவதற்காகவும், புத்துணர்ச்சியோடு வளர்வதற்காகவும், மறைக்கத்தக்கனவற்றை மறைத்தலே மறைத்தலாகும். உயிர்களின் இன்ப வாழ்க்கைக்கு ஒவ்வாத தீமையை அழித்தலே அழித்தலாகும். வளர்ந்து வரும் உயிர்கள் என்றும் இன்ப நிலையில் அமர்ந்து வாழச் செய்தல் அருளுதல் ஆகும். இவ்வாறு உயிர்களின் வாழ்நிலைகளை ஐந்து நிலைகளாகவும், இவ்வைந்து நிலைகளிலும் உயிர்களுக்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

(6ம் பக்க தொடர்ச்சி)

பாரதிய......

இச் சத்திகளுக்கெல்லாம் மூல மெய்ம்மை எது? நாம் ஆழ்ந்து யோசித்தால் இயற்கையில் ஆகாசம், பிராணன் என்ற இரண்டு பொருள்களிருப்பதை உணரலாம். ஆகாசம் நாம் சந்திக்கும் பருப்பொருள்கள், சூக்ஷ்மப் பொருள்களுக்கு மூலாதாரம்; பிராணன் (உயிர்ப்புச் சத்தி) இதன் மீது மோதிப் பற்றிணைப்புக் கொண்டால், ஆகாச தத்துவம் தன்னைப் பருப் பொருளாகவோ, சூக்ஷ்மப் பொருளாகவோ ஆக்கிப் பலவித படி வீதங்களில் மாறுதல்கள் பெறுகின்றது. பிராணனும் கூட ஆகாசத்தைப் போல் எங்கும் வியாபித்திருக்கும். அதுவும் கூட எங்கும், எதையும் ஊடுருவிச் செல்ல வியலும். எவ்வாறு நீர் பனிக்கட்டிகளாகமாறி, நீரிலேயே மிதந்து, நீரிலேயே நகர்கின்றதோ அது போலவே பிராணன் ஆகாசத்தினிடம் செயல்பட்டு உருக்களாகத் தென்படுகின்றது. ஆகாசத்தைப் பல உருக்களாக உருவாக்குவது பிராணன் என்ற சக்தியே. பருப்பொருளான இவ்வுடல் ஆகாசத்திலிருந்து உருவாக்கப்பட்ட பிராணனுடைய ஊர்தி. சூக்ஷ்ம உருக் கொண்டவைகள், எண்ண அலைகள், உணர்ச்சிகள் போன்ற யாவையுமாகும்.

சூக்ஷ்ம உடலைக் கடந்து சென்றால் பேருண்மையின் உணர்வு வெளிப்படையாகும். எவ்வாறு விரல்களிலுள்ள நுனி நகங்கள் எவ்வளவு முறை வெட்டி எறியப்பட்டாலும் பருப்பொருளின் பகுதியாக வளர்கின்றனவோ அவ்வாறே சூக்ஷ்ம உடலும் உரு ஒப்பனையாக மனிதனுடைய முழுமையில் ஒரு பகுதியாக அமைந்திருக்கின்றது.

இதனால் எண்ணியது ஈடேறும் பலன் கிடைக்கும். பதினான்கு முக ருத்திராட்சம் ஹனுமான் சொரூபம். கிடைத்தற்கரிதான இது கிடைக்கப் பெறுபவன் சிவனுக்கு சமமாக தேவர்களால் பூசிக்கப்படும் பேறு கிட்டுபவன். இது தலையில் அணிவதற்குரியது.

விஞ்ஞான ரீதியாகவும் ருத்திராட்சம் அளப்பரிய பயன்களைத் தருவதென அறியப்பட்டுள்ளது. ருத்திராட்ச மரத்தினை ELAEOCAPAEAE என்ற இனத்தைச் சேர்ந்ததாகத் தாவர இயல் அறிஞர்கள் கருதுகின்றனர். பாரதத்தின் வட பகுதியில் நீலகிரி, நேபாளம், அஸ்லாம், இமயமலைச் சாரலிலும் இவை அதிகமாகக் கிடைக்கின்றன.

ஒரு வகை மரங்கள். இதில் குட்டையானவை இவை ஈட்டிபோன்ற இலைகளை உடையன. முதலில் தொத்தாக பூக்கும் தொன்மை நிறப் பூக்கள். பின்னர் சதைப்பற்றான புளிப்பான கருநீலப் பழங்களைத், தோற்றுவிக்கும். இன்னொரு வகை ராட்சத அளவில் வாழ்வன.

ருத்திராட்சம் சிறந்த மருத்துவக் குணங்களைக் கொண்டது. அரத்த அழுத்தம் குறைய இதை அணிவது பலனளிக்கிறது. இதய நோய்க்கு ருத்திராட்சத்தை பன்னிரண்டு மணி நேரம் ஊற வைத்த நீரை அருந்துவது பயன்தரும்.

ருத்திராட்சத்தை தரம் பிரித்து சிறந்ததை அடையாளம் காண அதை தண்ணீரில் போட்டாம்போதும் அது மிதக்குமாயின் சிறந்ததல்ல.

★ மனிதர்களிடம் உள்ள அன்பு எப்பொழுதும் மறைவதில்லை. அது இடம் மாறுகிறது. அவ்வளவுதான்.

## அவலட்சணத்தை அழகானதாக்குகிறது !

வாழ்வு பெறுமதியானது எனக் கருதப்பெறுவதற்கு சிரத்தை என்னும் நம்பிக்கை, சம்மியம் என்னும் சுயவொழுக்கம், சமர்ப்பணம் என்னும் தியாகம் ஆகிய மூன்றும் அவசியமானவையாகும்.

சம்மியம் என்னும் தன்னடக்க வொழுக்கம் தவத்தினாலாவது. அது அவலட்சணத்தை அழகானதாக்குவது, அது உடம்பையும், புலன்களையும் மனத்தையும் தூய்மைப்படுத்துவது.

வாழ்வில் பண்பாடு உண்டாவதற்கு குடும்பமேமுதற் காரணம். நல்ல குடும்பத்தில் நல்ல குணங்கள் மலரும். தைத்திரிய உபநிடதம் உன் தாயாரைத் தெய்வமாகக் கருது, உன் தந்தையாரைத் தெய்வமாகக் கருது. ஆசிரியரைத் தெய்வமாகக் கருது என்று உரைக்கிறது உபதேசிக்கிறது.

குடும்பம் ஒற்றுமையாக வாழ்வதற்கு அதர்வவேதம் பிரார்த்திக்கிறது. ''நான் உங்களை ஒரு மனத்தராக்குவேன். வெறுப்பின்றி ஒன்றாக வாழ வழிவகுப்பேன். பசு தான் ஈன்ற கன்றை நேசிக்குமாப் போல் ஒருவரை ஒருவர் நேசியுங்கள். மைந்தன் தந்தைக்கு கீழ்ப்படிவானாக, அவன் யாதுடன் ஒரு மனத்தனாய் வாழ்வானாக. மனைவி கணவனிடம் அன்பாதரவாகப் பேசுவாளாக, சகோதரன் சகோதரனை நேசிப்பானாக, சகோதரி சகோதரியை நேசிப்பாளாக, எல்லோரும் ஒருமித்து ஒற்றுமையாக ஒரு மனத்தராய் வாழ்வீராக.

நன்றி—மில்வைட் செய்தி

## மருத்துவமும் மக்களும்

அடிக்கடி சளித்தொந்தரவுகளால் பாதிக்கப்படுகிறவர்கள் பசும்பாலில் ஒரு கரண்டி ஓமத்தைப்போட்டு காய்ச்சி தினமும் இரவில் அருந்தி வந்தால் சளித் தொல்லைகளிலிருந்து மீளலாம். இவையிரண்டும் எளிதாகக் கிடைக்கக்கூடியவைகள்.

மூட்டுவலி, உடல்வலி உள்ளவர்கள் வெந்நீரில் எலுமிச்சம் பழச் சாற்றைக் கலந்து அருந்தினால் மூட்டுவலி, உடல்வலி இருந்த இடம் தெரியாமல் பறக்கும்.

வாத நோயுள்ளவர்கள் தேனுடன் எலுமிச்சம்பழச் சாற்றைக் கலந்து சாப்பிட்டால் வாதநோய் அகலும்.

சிறுநீர் கழிப்பதில் சிரமம் ஏற்பட்டால் அரை அவுன்சு எலுமிச்சம்பழச் சாறும் அரை அவுன்சு நல்லெண்ணெயும் கலந்து தினசரி இரு வேலை சாப்பிடுங்கள். சிறுநீர் கழிப்பதில் கடுப்பு இருந்தாலும் நீங்கும்.

ஆஸ்துமா நோயுள்ளவர்கள், பேரீச்சம்பழம், நன்னாரி, வால் மிளகு, கொம்பரக்கு இவை நான்கையும் இடித்து தேன் கலந்து சாப்பிடுவதால் ஆஸ்துமாநோய் குணமாகும்.

வால் மிளகு இருமலை அகற்றும் ஒரு மூலிகை.

தொகுப்பு—சித்தர்

லண்டனில்

இந்து கலாசாரம்

கிடைக்குமிடம்

★

**No. 11, Durley Avenue**
**Pinner Middsex**
**Has lJQ**
**United Kingdom**

( 8ம் பக்க தொடர்ச்சி)

குத் துணை செய்யும் ஐந்தொழில்களே கடவுளின் ஐந்தொழில்கள் என்றும் தமிழ் கூறும்.

உயிர்கள் உய்யும் நலன் நோக்கி உடுத்துக் கொண்டதே உடம்பு. உடு என்ற முதனிலையிலிருந்தே உடம்பு என்ற சொல் பிறக்கிறது. உயிர் அறியும் இயல்பினது. உயிர்ஓர் அறிவுப்பொருளே! ஆயினும் இயற்கையிலேயே அறியாமையில் உயிர் இணைந்து இருக்கிறது. உயிர், அறியாமையினின்றும்விலகி அறிவைப் பெறுதலே வாழ்க்கையின் நோக்கம். உயிர், அறிவு மயமாதலே உயிரின் முதிர்ச்சி வளர்ச்சி நிலை. உயிர், அறியாமையை நீக்கிக் கொண்டு அறிவைப் பெறுவதற்கே பேரறிவாகிய கடவுளை நாடுகிறது; துணையாகப் பெறுகிறது. வளர்ந்த அறிவின் இயல்பு வாழ்வித்தலே. வளர்ந்த அறிவு, சிற்றெல்லைகளைக் கடந்தது. அதற்குத் தற்சார்பான குறிக்கோள் இராது. எனவே உலகுயிர்கள் அனைத்தையும் தழுவி நின்று மெல்ல அவற்றை அறியாமையிலிருந்து நீக்கி அறிவில் பூத்துக் குலுங்கச் செய்தலும் அறிவில் இன்புற்று அமரச் செய்தலுமே இறைவனின் குறிக்கோள். இது தமிழ்ச் சமயத்தின் சாரம். தமிழர் சமயம், இன்று தோன்றி வளர்ந்துள்ள பொருள் முதல் வாதக் கொள்கைக்கும் ஈடு கொடுக்கும் வகையில் அமைந்த சமயமாகும்; ஏன்? அகநிலைக் கருத்து முதல்வாதம் என்று சொல்லப் படுகின்ற கொள்கை, தமிழ்ச் சமயத்திற்கு முரணானது. இக்கொள்கையுடையார் பொருள்களே இல்லை; எல்லாம் கருத்துகளின் பிரதிபலிப்பே என்பர். இது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று. அடுத்து, புறநிலைக் கருத்து முதல்வாதக் கொள்கை. இக்கொள்கையுடையார் உயிர் என்று ஒன்று இல்லை; ''பரமான்மா'' என்று சொல்லப்படுகின்ற கடவுளின் ஒரு பகுதியே ஆன்மா என்பர். பரவெளியாகிய ஆகாயத்தையும் குடத்திற்குள் உள்ள ஆகாயத்தையும் ஒப்புமை காட்டுவர். இவ்விரண்டிற்கும் பொருள் வேறுபாடுஇல்லாதபோதும் குடத்திற்குள்ளிருப்பதன் காரணமாக ஏற்பட்ட தன்மை வேறுபாட்டை அவர்கள் அறிகிலர். இக்கொள்கையினால் அவர்கள் ''நானே கடவுள்'' என்று தருக்கித்திரியும் இயல்பினராகின்றனர், அதுமட்டுமா? உலகம் என்ற ஒன்று இல்லை துய்ப்பனவும் இல்லை; உய்ப்பனவும் இல்லை; எல்லாம் வெறும் மயக்கம் என்பர். உலகம் பொய்யன்று; உயிரும் பொய்யன்று. எனவே இந்தப் பொய்மைக் கொள்கை மயக்கத்தில் பிறந்தது: மயக்கத்தில் ஆழ்த்துவது. இக்கொள்கைபொருள் முதல் வாதத்தின் முன்னும் தமிழ்ச் சமயத்தின் முன்னும் நிற்க முடியாது புறநிலைக் கருத்து முதல் வாதிகள் கடவுளை நம்புகிறவர்கள்.

## தமிழ்ச் சமயம் இயற்கையோடு இணைந்தது !

உலகிற்கும் உயிர்களுக்கும் புறத்தே கடவுளுண்டு; அது முன்னே தோற்றியது; உயிர் உலகம்எல்லாவற்றையும் அக் கடவுளே படைக்கிறது என்ற கொள்கையினர் இவர்கள். இவற்றுள் கடவுள் உண்டு என்ற கொள்கையையும், அது வளர்ந்த அறிவினது என்பதையும் தமிழ்ச் சமயம் ஒத்துக் கொள்ளுகிறது. ஆனால், உயிர்களும் உலகமும் கடவுளால் படைக்கப்பட்டன அல்ல; உயிர்களும் கடவுளைப்போல் என்றும் உள்ளவை. உலகு இறைவனின் இயக்கவியல் செயல்வழியது. உலகு, முகிழ்த்து விரிவதற்குக் காரணமாக— முதற் களமாக அமைந்துள்ள மாயையிலிருந்து முகிழ்த்ததேயாம். அதாவது தோன்றியதேயாம் என்பது தமிழ்ச் சமயம். உயிர்கள், கடவுளால் படைக்கப்பட்டன என்றால், உயிர்களின் குறைநிறைகளுக்கும் இன்ப துன்பங்களுக்கும் யார் பொறுப்பு? குறைவிலா நிறைவு, கோதிலா அமுது. நன்றுடையான், தீயதில்லான், இன்பமுடையான், துன்பமில்லான் என்று விளங்குகின்றவனாகிய பரம் பொருளால் குறைகளுடைய பொருள்— உயிர் படைக்கப்பட்டது என்று கூறுவது கடவுட் கொள்கையையே குறைபடுத்துவதாகும். இயற்கையின் பரிணாம வளர்ச்சி, குறைகள் நிறைகள் ஆவதேயாம். நிறைகள் குறைகளாவதல்ல. எனவே உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டன அல்ல என்ற தமிழ்க் கொள்கை—உயிர்கள் உற்று அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் கடவுள் பொறுப்பாகமாட்டார். அவைகளின் செயற்பாடே அவற்றுக்குக் காரணம் என்ற தமிழ்க் கொள்கை—பொருள்முதல் வாதத்தினை ஈடுகொடுத்து நிற்கின்ற சிறப்புடைய கொள்கை.

தமிழ்ச் சமயம் வாழ்க்கையை பொய்மை என்றும் கூறுவதில்லை; வெறுத்து ஒதுக்குவதுமில்லை; ஒதுங்குவதுமில்லை. தமிழ்ச் சமயம் வாழ்வாங்கு வாழ வலியுறுத்துவதேயாம். தமிழ்ச் சமயத்தின் கொள்கை, செயல்கள் மட்டுமே பயன் தருவன அல்ல; சிந்தனை இன்றியமையாதது; செயல்களின் நோக்கமே அளவைக்குரியது என்பதாகும். தமிழ்ச் சமயம் இயற்கையோடு இசைந்தது. அது இல்லற வாழ்க்கை தான் உயர்ந்தது என்றோ, துறவற வாழ்க்கை தான் உயர்ந்தது என்றோ பறை சாற்றுவதில்லை. எந்த வாழ்க்கையாயினும் நெறிமுறைகளிற் சிறந்து வாழ்வாராயின் இன்புறுவர் என்பதே தமிழ்ச் சமயக் கொள்கை. எந்நெறியில் நின்றாலும் எத்தொழிலைச் செய்தாலும், சிந்தனையும் செயலும் சிறந்திருக்குமானால் சிறப்புடையதேயாம். செம்பொருளைக் காணத் துணை செய்வதேயாம். துய்த்தல், தூய இன்பத்திற்குத் தடையன்று. ஆனால், மற்றவர் துய்த்தலுக்கு இடையூறாக மற்றவர் துய்க்க வழங்காமல் தானே துய்க்க ஒருப்படுதல் தமிழ் நெறிக்கு முரணானது. எந்த வகை வாழ்க்கையாயினும் துய்ப்பித்தல்குறிக்கோளாக இருக்க வேண்டும். அங்ஙனம் வாழும் வாழ்க்கை தமிழ் வாழ்க்கை. இம் மண்ணிலேயே வளர்ந்த நிலையில் இன்ப அன்பினைத் துய்த்து வாழமுடியும்என்ற நம்பிக்கை உடையது தமிழ்ச் சமயம். உயிர்கள் ஞானமயமாகி இன்ப அன்பினில் தங்கி திருவருளைத் துய்த்து இன்புறுதலே வீடு!

## உலகப்பொது நெறி

இங்ஙனம் வளர்ந்த தமிழ்ச் சமயம் இது வரையில் உலகில் தோன்றிய தத்துவ இயல்களில் சிறந்ததாக, முடிந்த முடிவாக விளங்கி வருகிறது.

இச்சமய நெறியை, நாம் தமிழ்ச் சமயம் என்று குறிப்பிட்டாலும் இந்நெறி உலகப் பொது நெறி. தமிழ் மொழிச் சிந்தனையாளர்களிடம் தோன்றி வளர்ந்ததால் தமிழ்ச் சமயமாகின்றது. ஆனால், தத்துவச் சிறப்புகளாலும் கொள்கை உயர்வாலும், நடைமுறை வாழ்வியலுக்கு இசைந்து இருப்பதாலும், எல்லா வேறுபாடுகளையும் கடிந்து

(12ம் பக்கம் பார்க்க)

# ★ ஞானம் ★

—சிவஞானவாரிதி, சைவ சித்தாந்த காவலர்
கு. குருசுவாமி—

சைவநாற்பதங்களுள்மிக உயர்ந்ததாகக் கருதப்படுவதும், நான்காவதாக வைத்து எண்ணப்படுவதும் ஞான நிலையே—ஞானமார்க்கம் சாயுச்சிய பதவியைத் தருவது. ஞானம் என்னும் சொல் 'ஞா' என்னும் வடமொழியிலிருந்து தோற்றியிருக்கலாம் என வடமொழி நூல் வல்லுநர் கூறுகிறார். ஞா என்றால் அறிதல். எனவே ஞானம் என்றால் அறிவு என்ற பொருளைத் தரும். திருவருள் பற்றிய உண்மையான அறிவைத் தருவது மெஞ்ஞானம். இந்த அறிவு விஞ்ஞானத்தை விட மிகவும் மேலானது. விஞ்ஞானம் இந்த உலகத்தை மட்டுமே ஆராய்ந்து அறிய முற்படுவது. ஆயினும் மெஞ்ஞானம் இந்த உலகத்தில் வாழும் காலத்தே என்றும் இறவாத பேரின்பப் பெருவாழ்வு பெறும் வழியினைக் கூறுவது.

சிவாகம நூல்கள், சமய சாத்திரங்கள் அகியவற்றை நன்கு கற்று ஐயந் திரிபு மயக்கம் ஆகிய முக்குற்றங்களும் நீங்கப் படித்தறிதல் வேண்டும். தெளிவாக ஆகமக் கருத்துக்களைத் தெரிந்து கொண்டபின், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் செய்தியே உண்மையானது என அறிந்து தெளிதல் வேண்டும். பதியாக விளங்குபவன் இயல்பாகவே பாசங்களிலிருந்தும் நீங்கியவனாகிய சிவபெருமான் என்னும் உண்மை தெரிந்துகொண்டதும், பசுவாகிய ஆன்மா அனாதியாகவே ஆணவமல சம்பந்தமாகியதனாலே பாசவலையிலகப்பட்டு உலகிலே பிறவி எடுக்கிறது. அப்படிப் பிறவி எடுக்கும்போது முற்பிறவியிற் செய்து முடித்த பாவ கரும வினைப் பயனாக, உடல் கருவிகரணம், வாழும் உலகம், அனுபவிக்கும் இன்பதுன்பம் ஆகியன கிட்டுகின்றன. ஆன்மா உடலுடன் வாழும் உலகம் என்றும் நிலையானதன்று. உடல் என்றும் நிலையானதன்று. அண்டத்திலுள்ளது பிண்டத்தில் என்பதற்கிணங்க, பிருதிவியாகிய பூமியின் பாகம் உடலில் தசை, எலும்பு, தோலாகவும், நீரின் இயல்பான அப்புதின் பாகம் இரத்தம், சலம், வியர்வையாகவும், அக்கினியாகிய தேயுவின் பாகம்" உடலில் சூடாகவும், வாயுவாகிய காற்றின் பாகம் மூச்சுக் காற்றாகவும், வெளியாகிய ஆகாசத்தின் பாகம் உடலிற் காணப்படும் இடைவெளியாகவும் அமைகிறது. உயிர் உடலுடன் சேருவது முன்வினைப் பயனாகவே. என்வோது உயிர் உடலுடன் சேருகிறதோ அப்போது உடலுடன் வாழும் காலமும்தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இந்த உடலுக்கு மூப்பு, நோய், சாக்காடு எல்லாம் உண்டு. ஆனால் உடலுள் இருக்கும் உயிருக்கு மூப்பு, பிணி, சாக்காடு எதுவும் கிடையாது. உடலுடன் கூடிவாழுங் காலத்து, உயிரானது சடல் அனுபவிப்பதைத் தான் அனுபவிப்பது போல மயங்குகிறது. இந்த மயக்கநிலை சகவாச தோஷத்தினாலே ஏற்பட்டது. சிவஞானத்தைத் தரும் ஞானமே உண்மையான ஞானமாகும். சிவஞானத்தை அடைவதன் முன் பாசஞானம், பசுஞானம் ஆகிய இரண்டையும் அறிந்து அவற்றை உண்மை ஞானம் அல்லவென்று வில்ல வேண்டும். அங்ஙனம் விலக்கா விட்டால் சிவஞானம் அல்லாததை யெல்லாம் சிவஞானமென நம்பி அல்லலுறுவோம்.

சுட்டி யறியப்படும் தேகாதி பிரபஞ்சத்தையும் அதன் இரகசியங்களையும் உண்மையெனக் கொண்டு ஆராய்வதால் ஏற்படும் ஞானம் பாசஞானம் எனப்படும். மந்திரங்கள், வேதாகம சாத்திரங்கள், பூத, பௌதிக விஞ்ஞான சாத்திரங்கள் ஆகியவும் ஏனைய பிற உலகில் ஞானங்கள், அனைத்தும் பாசஞானத்துட்படுவனவும், உடலுடன் கூடிய காலத்தையும் உயிர் தான் அனுபவிப்பதாக மயங்கி நின்று அவற்றை ஆராய்வது பசுஞானமாம். பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் சிவஞானம் ஏற்படாது. சம்பந்தம் விருத்தியாகாது. பௌதிக விஞ்ஞானிகள் சடப்பொருள்களை ஆராய்கிறார்கள். அவர்களுடைய ஆராய்ச்சி அநித்தியத்தையே ஆராய்கிறது. அவ்வித ஆராய்ச்சி செய்பவர்களது மனம் சடமயமாகினது. இது பாசஞானத்தைச் சார்ந்தது மெஞ்ஞானமாகாது. அக்கித்தை ஆராயும் அறிவு எது என அவர்கள் ஆராய்வதில்லை. தன்னை விட்டுப் பிறவற்றை ஆராயும்போது நம் அறிவைச்சடப்பொருள் அறியாது. தன்னை அறியாத போது சிவத்தை அறிவது எப்படி?

தன்னை யறியார் தலைவனையுந் தானறியார்
பின்னையவர் ஞானம் பிதற்றலே—அன்னவரைச்
சாராது சற்குருவைச் சார்ந்துய்யத் தெய்வமே
பாராய் அருட்கண் பதித்து

தேகாதி தத்துவங்களை நானென்று அல்லது எனது என்று அபிமானித்தலால் உயிரினிடத்து ஏற்படும், ஞானம் பசுஞானம். தேகாதிதத்துவங்களின் தருமத்தை அல்லது குணத்தை ஆன்மாவின் கண் ஏற்றி விவகரித்தலால் உண்டாகும் ஞானமே பசுஞானம்.

இந்தப் பாசஞானம், பசுஞானம் ஆகியன அஞ்ஞானத்தை வளர்ப்பனவேயன்றி சிவஞானத்தைச் சேரவிடா.

சிவஞானமே நித்தியானந்தத்திற்கு ஒரே வழி. முப்பொருள் விளக்கம் சிவஞானப் பாதையின் முதற்படியாகிறது. பதியாகிய சிவனைப் பாசமாகிய உலகில் வாழும் உயிர்நாடிச் செல்லும்போது ஊனக்கண் பாசம் உணராப்பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி உதாத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம்பதி என விளக்குகிறது சிவஞான போதம் (9 ம் சூத்திரம்).

ஆகம நூல்களை நன்கு கற்றறிந்ததன்பயனாக, உடலுடன் கூடிவாழுங் காலத்து மெய்நெறி கூடுதல் பிறவிப் பயனும் என அறிந்து, இயல்பாகவே பஞ்சப் புலன் வழிச் சென்று அலைபாயும் மனதைக்கட்டி, ஒருவழிப்படுத்தி இறை தியானத்தில் ஈடுபடச் செய்தல் வேண்டும். இறைவன் சிந்தனையைத் தனக்காகவே நம்மிடம் தந்திருக்கின்றான் என்பதை மனிதன் முதலில் உணருதல் வேண்டும். இன்று மனிதன் தனக்காகவே வாழ்ந்து, தன்னைப் பற்றியே சிந்தித்து, மீண்டும் மீண்டும் பிறவிக்காளாக்கிக் கொள்வதில் முனைந்து நிற்கின்றான். பிறவித் துன்பத்தில் அழுந்தாது நீங்கும் வழியைப் பிறவி எடுத்துத் தான் நீக்குதல் வேண்டும்.

பசுவாகிய உயிர் பதியாகிய சிவத்தை நாடுவதே முறையானது என ஆகமங்கள் குறிப்பிடுகின்றன.

(12ம் பக்கம் பார்க்க)

(10ம் பக்கம் தொடர்ச்சி)

தமிழ்.........

ஒதுக்குதலாகும். இத் தமிழ்ச் சமய நெறி உலகப் பொது நெறியாதற்குத் தகுதியுடையது. இந்நெறி உலகப் பொது நெறியானல் கடவுள் நெறியின் பெயரால் ஒரு குலம் தோன்றும்; சமநிலைச் சமுதாயம் மலரும்; வாழ்க்கை, தன்னம்பிக்கையால் ஆள்வினையால் விரிவடையும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை, என்று முழங்கி மக்கள் வாழ்வர். பெண்மை பெருமைப் படுத்தப் பெறும், வழுவிலா மனையும் சிறந்து விளங்கும். பாரம் ஈசன் பணியே எனக் கொண்டு அந்தணர் வாழ்வர். தமிழ்ச் சமயநெறி கால்கொள்ளும். திசையெல்லாம் ஒரு புதிய சமுதாயம் அமைந்து விளங்கும்

(நன்றி: ஐந்தாம் உலகத் தமிழ் மகாநாடு விழா மலர் 1981).

## அன்பர்களுக்கு!

தங்கள் பிரதேசங்களிலுள்ள இந்து ஆலயங்களின் குறைபாடுகள், சீர்கேடுகள் மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் தமிழ் கலாசாரங்கள் பேணப்பட வேண்டிய நிலைமைகள், தமிழ் சமுதாயத்தின் மத்தியிலுள்ள ஒழுக்க சீர்கேடுகள் போன்றவைகளை விபரமாகவும் சுருக்கமாகவும் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம். அவைகளை எமது பத்திரிகையில் பிரசுரித்து தீர்வு காண முயலுவோம்.

ஆசிரியர்
இந்து கலாசாரம்
39/23, நெல்சன் ஒழுங்கை,
கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 3.

## குங்குமத்தின் மகிமை

மணமாகிய மங்கையரின் தமிழர் பாரம்பரிய அணிகலன்களில் குங்குமம் மிகவும் முக்கியம் வாய்ந்தது.

குங்குமத்தை கதிரவன் உதயமாகும் நேரத்தில் கிழக்குத் திசையை நோக்கி நெற்றியில் திலகமிட மாங்கல்ய பாக்கியமும், கணவனுக்கு வீரம், புகழ், செல்வம் உண்டாகும்.

தெற்கு திசையைநோக்கி நெற்றியில் திலகமிட விரோதிகள் ஒடுங்குவார்கள்.

வடக்குத் திசையை நோக்கித் திலகமிட வம்ச விருத்தியும், பூமி லாபமும், பொருள் சேர்க்கையும் ஏற்படும்.

மேற்கு திசையைநோக்கி நெற்றியில் திலகமிடத் தீராத நோய் தீரும்.

கொழுந்து

ஆசிரியர்:
அந்தனி ஜீவா

மலையகத்திலிருந்து காலாண்டுதோறும்மலர்ந்து கொண்டிருக்கும் இலக்கிய சஞ்சிகை

கொழுந்து

மலையக மக்களிடையே கொழுந்து சஞ்சிகையை விநியோகிக்க விரும்பும் இளைஞர்கள் கீழ் கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
கொழுந்து
57, மகிந்த பிளேஸ்
கொழும்பு 6

# முன்தோன்றிய மூத்த மதம்

இற்றைவரை இறைபடைத்தவனு லகழ்ந்து மாராய்ந்தும்
இயலாததே இந்துமத தோற்றம் காணல்
இம்மையில் முத்தி நிலையெய் தீடேற்றம்பெற
இகத்தி லுயர்வழியும் இதுவேயாம்!

சிந்துவெளி புதுமை சிவநெறியின் பழமையுரைக்க
சித்தார்த்தரும் சிவநெறி சார்ந்தவரே
மதங்கள் பலதோன்றினுலு மெங்கும் வியாபித்தொளிவீசி
மண்ணுயிர்கள் மீட்சியுற வழிபகன்றிடும்!

அனைத்து மதத்திலும் ஆதிவழி தொன்றுதொட்டு
அண்டசராசரத்தி லோர் அறங்காக்கும்
அர்த்தமிகு போதனைக ளாதிமத மன்றுரைத்திட
அகிலமாமும் விஞ்ஞான மின்றுணர்ந்ததுவே!

—நாகன் ஹரிதாஸ்

## தர்மம் தத்தளிக்கிறது

கோவிலுக்குப் போகிறவர்களைக் காட்டிலும் கடற்கரைக்குப் போகிறவர்களே அதிகம். வயதாகியும் ஆன்மீக விஷயங்களில் ஆர்வம்கொண்டவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். அதனால் தர்மம் இருக்க இடமின்றித் தத்தளிக்கிறது.

★

## காஞ்சிப் பெரியாள்வார் அருள்வாக்கு

தினமும் ஐந்து நிமிஷம் கடவுளை நினையுங்கள். ஒரு சிறிய தருமம் செய்யுங்கள். ஒவ்வொருவரும்சிறிது தருமம் செய்யின் உலகில் பல ஜீவன்களின் கஷ்டம் நீங்கிவிடும். ஆயிரம் பேர் வேண்டியதில்லை.

(11ம் பக்க தொடர்ச்சி)

சிவன் கோயில்களிலே மூல மூர்த்தியாக விளங்கும் சிவலிங்கமாகிய அருவுருவத் திருமேனி கொண்டு வீற்றிருக்கும்பதியை உயிராகிய பசு பத்திரலிங்கமான கொடித்தம்பத்திற்கு முன்பதாக வேறு எவ்வித நோக்கமுமின்றி பதியையே பார்த்தவாறு அமைந்திருப்பது ஞானமார்க்கத்தைப் போதிக்கும் வகையிலேயே காணப்படுகிறது.

சாதனை மார்க்கத்திலே எதையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாதபோதும் ஞான நிலை கைவரப்பெற்றவர் உலகம் நிலையானது, அல்ல என்பதை முதலிலே உணர்ந்து, நிலை வேறானது பதியின் திருவருளே என்பதைத் தெளிதல் ஞான நிலையின் முதலாவது படியாகும். இவ்விதம் தெளிந்து கொண்டதும், உலகியல் இன்பங்களிலும் மேலானது ஒன்று உண்டு. உலகியலில் அனுபவிப்பது சிற்றின்பம். பதியிடம் பெறுவது பேரின்பம். எனவே

(14ம் பக்கம் பார்க்க)

★ மலையகத்தில் மதமாற்றக் கெடுபிடியை நிறுத்து !

★ இந்து சமயம் போதிக்க போதிய ஆசிரியர்களை நியமி! !

★ ஆசிரியர்கள பற்றுக் குறை என்பது கேலிக்கூத்து !!!

★ பெரும்பான்மையாக இந்து சமயப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் இந்து அதிபர்களை நியமி !!!!

மேற்கூறிய கோரிக்கைகளை வென்றெடுக்க

## இந்து இளைஞர் மகாநாடு

(கொழும்பில் நடைபெறவிருக்கிறது. விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.)

**இந்து இளைஞர்களே அணிதிரளுங்கள்!**

### துணைவேந்தர் வித்தி காலமானார்

இலங்கை பல்கலைக் கழக யாழ் வளாக முன்னாள் உப வேந்தர் திரு. சு. வித்தியானந்தன் தனது 64 வது வயதில் காலமானார்.

''வித்தி'' என அனைவராலும் அழைக்கப்படும் அன்னார் யாழ்வளாகத்தின் முதலாவது உப வேந்தராக நியமிக்கப் படுவதன் முன்பு பேராதனை வளாகத்தில் தமிழ்த்துறை பேராசிரியராக நீண்ட காலம் சேவையாற்றினார்.

தமிழ் வளர்ச்சிக்கும் இலக்கியத் துறைக்கும், நாடக வளர்ச்சிக்கும் பல அரிய சேவையாற்றிய இவர், உலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கான குழுவிற்குத் தலைமை வகித்தார். மறைந்த மாமேதை சுவாமி விபுலானந்த அடிகளாரின் மாணவரான இவர் சிறந்ததொரு தொண்டராவார்.

அன்னாரின் மறைவு தமிழுலகிற்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். பூதவுடல் மறைந்தாலும், அன்னாரின் புகழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் என்றென்றும் உலாவி வரும்.

**அன்னாருக்கு எமது அஞ்சலி**

### பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா அருள் வாக்கு

1. பணம் வந்து போகும், நல்லொழுக்கம் வந்து வளரும்.
2. காலத்தின் விரயம்—வாழ்வின் நாசம்.
3. இன்பம் என்பது இரு துன்பத்தின் இடைவெளியே.
4. கல்லைக் கடவுளாக்கு
   கடவுளை கல்லாக்காதே.
5. நீ ஒருவனல்ல மூவராயிருக்கிறாய்.
   ஒன்று பிறர் உன்னைப்பற்றி நினைப்பது.
   மற்றது நீ உன்னைப் பற்றி எண்ணியிருப்பது.
   மூன்றாவது நீ உண்மையில் யார் என்பது.
6. அன்பே கடவுள் அன்பில் வாழ்.

**பொங்கும்.........**

( 3ம் பக்க தொடர்ச்சி)

இல்லத்தில் இல்லாளுடனும் மழலைச் செல்வங்களுடனும் இன்புற்று வாழும் உழவர் மக்களுக்கும் நன்மை பயக்கும் ஓர் உயரிய பாரம்பரிய விழாவாகும்.

நமது ஆசிரியர் குழு

திரு. ஏ. எம். துரைசாமி (நிருவாகம்)
திரு. ஈ. இரங்கநாதன்
திரு. எஸ். அரவிந்தன்
திரு. நா. ஹரிதாஸ்
திருமதி. சுபாஷிணி சுந்திரராஜன்

**உருத்..........**

(7ம் பக்க தொடர்ச்சி)

கருதப்படுகிறார். பத்து முகம் விஷ்ணு சொருபமாகும். இதனை தணிய தோஷம், விஷம், கிரகம் ஆகியன அகலும். பதினொரு முகம் ருத்திரர் பதினொருவரின் ரூபமாகும். இதனை சிரசில் அணிவதால் அசுவமேதயாக பலனும், கோடி கோதான பயனும் கிட்டும். பன்னிரண்டு முகருத்திராட்சம் சூரிய நாராயணர் சொருபமாகும். காதுகளில் அணியத்தக்கது. இதனால், சகல பாக்கியமும் கிட்டும். பதின் மூன்று முகமானது இந்திர சொருபமாகும்.

(12ம் பக்க தொடர்ச்சி)

பேரின்பமே பெரிதும் முயன்று பெறுதல் வேண்டும் எனத் துணிந்து உலகியல் சிற்றின்ப அனுபவத்தை உதறி எறிவது இரண்டாவது படியாகும். உலகியல் பந்த பாசங்களிலிருந்தும் நீங்கினும் அடுத்து ஓடும் செம்பொனும் ஒன்றென மதிக்கும் இருவினை ஒப்பு ஏற்படுதல் வேண்டும். நன்மையில் பெருமதிப்பும், தனி விருப்பும் ஆகாது. அதே போன்று தீமையில் பெரு வெறுப்பும் தனி இகழ்வும் ஆகாது. நன்றேவரினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை. உனக்கே பாரம் எனத் யன்னை முழுவதும் இறைவனுக்கே ஒப்புக்கொடுத்தலே இருவினை ஒப்பு ஏற்படுவதற்குச் சிறந்த வழி என அறிதல் மூன்றாவது படியாகும். இந்த மூன்று நிலையையும் நன்கு அறிந்து அதன் வழி நிற்போர் இருவினை ஒப்பு, மலபரிபாகம் ஆகிய தன்மைகளை ஞான வழி நின்று சாதித்த மெய்மையாளர். ஆணவ மலத்துடன் தனித்திருக்கும் நிலையில் அடியவரையும் சிவாலயங்களையும் சிவனாகவே நினைத்து வழிபடும்போது நான் எனும் அகந்தையும், எனது என்னும் மமதையும் அடங்கியவராயிருக்கும் போது, இறைவன் அந்த ஞான நிலை நிற்கும் அடியவரது அறிவிலே ஊறி நின்று உள்ளுணர்வினை ஊட்டுவான். அறிஞர்க்கு அறிவாம் உருவும் உளனாவான் பதி. அவனே வாலறிவன்.

முப்பொருள் விளக்கமாக, பொய்யான உலகில் மெய்யான அறிவைப் பெற உயிர் உடலுடன் கூடி வாழ்ந்து மெஞ்ஞானத்தைப் பெற உதவுவதால் பூவுலக வாழ்வும் விஸ்ணு, பிரமா ஆகியோரால் விரும்பப்படுகின்ற தன்மை பெறுகின்றது. ஆதலின் சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றின் முடிந்த முடிபாக ஞானநிலை கருதப்படுகிறது.

---

ஆண்டவனிடம் பக்தி செலுத்த வேண்டியதில்லை. அவனுடைய அடியவர்களிடம் பக்தி செலுத்தி வாருங்கள். ஆண்டவன் பக்தி செலுத்துவோருக்குச் சொத்தும், சுதந்திரமும் தருவான். ஆனால் அடியவர்களோ அந்த ஆண்டவனையே தந்து விடுவார்கள்.

— கபீர்தாஸ் —

ஆதியும் அந்தமும் இல்லா
அரும் பெருஞ் சோதியைப்
பாடிப்பரவிப் பெருவாழ்வு
பெறுவோம்!

இந்து கலாசாரத்துக்கு எமது வாழ்த்துக்கள்

அன்பளிப்பு

**வி. பி. எஸ்.**

கியூவ் ரோடு,

கொழும்பு 2.

சிவா...........

(4 ம் பக்க தொடர்ச்சி)

40. என்றும் முகமலர்ச்சி யுடன் இருக்கப் பழகுக.
41. தினமும் சில மணி நேரம் தனிமையில் இருக்கவும்.
42. என்றும் மனத்தைச் சமநிலையில் இருத்திப் பழகுக.
43. ஒருமுறை பேசுமுன் இருமுறை யோசிக்கவும்.
44. புறங்கூடல், பிறர் பழி கூறல் தவிர்க்க வேண்டியவை.
45. எவ்வளவு துன்பத்தையும் சகித்துக்கொள்க.
46. எல்லா இடங்களிலும் எவரிடத்தும் கடவுள் இருக்கிறார்.
47. சாந்தமாகவும் தைரியமாகவும் தடைகளை எதிர்க்குக.
48. முகஸ்துதி கேட்டு ஏமாறுமல் இருத்தல் வேண்டும்.
49. எண்ணங்களைத் தூய்மையாக்கிக் கட்டுப்படுத்தவும்.
50. பிறர் கண்டிப்பதைக் கவனியாமல் நேர்மையாய் இருக்க.
51. கடவுளிடம் அன்னியோன்யமாய் இருக்கவும்.
52. எதிலும் மிதமாயிருத்தல் மிகவும் நல்லது.
53. பிறரின் நற்கருமங்களை மெச்சிப் பேசுக.
54. வைராக்கியத்திற்காகக் கோட் பாடுகளைக் கொள்க.
55. குற்றங்கள் இருந்தால் நேர்மையாக ஒப்புக் கொள்க.
56. புலன்களை ஐவ்வொன்முக அடக்கப் பழகுக.
57. எவையேனும் சில ஆசனங்களைத் தினமும் செய்க.
58. யோகாசனத்தால் இறைவனை அணைத்துக் கொள்க.
59. இறைவனை அடைதலே பிறவி எடுத்ததன் பயன்.
60. இறைவன் என்றுவது எம்மிடம் வந்து சேருவான்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நன்றி: மில்க்வைட் செய்தி

---

தமிழ்...........

(1ம் பக்க தொடர்ச்சி)

வின் பங்களிப்பு மகத்தானதாகும். இவ்வாறு ஒரு உயரிய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கும் யுனெஸ்கோ தனது உலக கலாசார வெளியீட்டில் இலங்கையின் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களையோ, கலை, கலாசாரங்களையோ சேர்த்துக் கொள்ளாததையிட்டு தமிழ் மக்கள் கவலை தெரிவிப்பதாக 18.1.89 அன்று வீரகேசரி நாளிதழின் செய்தி ஒன்று குறிப்பிடுகின்றது. ஏற்கனவே அநுராதபுரம், சிகிரிய போன்ற பாரம்பரிய பிரதேசங்கள் உலக கலாசார வெளியீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. அப்பொழுது கண்டியும், காலியும் சேர்க்கப்பட்டுள்ளதாம். ஆனல் தொன்மை வாய்ந்த திருகோணமலை, கோணேஸ்வரர் ஆலயம், மாந்தை போன்ற முக்கியத்துவமுடைய இடங்கள் சேர்க்கப்படவில்லை. இந்த பாகுபாடு, புறக்கணிப்பு ஏன் என்று தமிழ் மக்கள் கேட்பதில் நியாயமிருக்கின்றது.

### ஒதுக்கல் வேண்டாம்

இலங்கையின் தேசிய மட்டத்தில் நடைபெறும் வரலாற்றுத் தேடல்களில் ஊடுறுவியுள்ள ஒதுக்கல் வாதம் யுனெஸ்கோவிலும் எதிரொலிக்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும். இந்த நியாய பூர்வமான கோரிக்கைக்கு யுனெஸ்கோ செவிசாய்க்க வேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.

நடன, இசை மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

★ நடனம் இசை தொடர்பான அனைத்து புத்தகங்களையும் வாங்குவதற்கும்

★ இவை தொடர்பான கெசட்டுகளை வாங்குவதற்கும்

★ பரத நாட்டிய நகைகள், தாளம், நட்டுவாங்கம் சலங்கை, பூக்கள் அழைப்பிதழ்கள் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்

★ தலை சாமான்களையும், பரத நாட்டிய நகைகளையும் தலைப்பாகை போன்றவற்றையும் வாடகைக்கு பெறவும்

★ பரதம் தொடர்பான எல்லா தேவைகளுக்கும்

★ திருமணம் தொடர்பான எல்லா தேவைகளுக்கும் அலங்காரத்துக்கும்

அணுகிப் பயன் பெறுங்கள்

சப்தகிரிஸ்
27, சில்வர் சிமித் லேன்,
கொழும்பு 12.

உள்ளவர் இல்லாதவர்க்கு

அன்புடன் பரிமாறினுல்

ஏழ்மை நீங்கி எல்லோருமே

இன்புற்று வாழலாம்!

★

இந்துகலாசாரமே -- சேவையே

உனது முழு மூச்சாக

ஓங்குக!

★

அன்பளிப்பு

ஆர். வி.


இப்பத்திரிகை கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கை 39/23, இல்லத்தில் வசிக்கும் ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு கிராண்ட்பாஸ் வீதி, 213ம் இலக்கத்திலுள்ள ஸ்டார்லேன் அச்சகத்தில் 1. 2. 89ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.